[9th November 1965

பள்ளி இறுதித் தேர்வு முடிவுகளை வெளியிடுதல்

*** 390 கேள்வி.—திரு. செ. மாதவன் :**
திரு. ஆ. கு. சுப்பையா : } கனம் முதல் அமைச்சர்
தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு நடந்த பள்ளி இறுதித் தேர்வின் (S.S.L.C முடிவுகளைக் காலந்தாழ்ந்து செய்தித்தாள்களுக்கு அறிவித்தது குறித்து செய்தி நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. ஆ. கு. சுப்பையா : கடந்த எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சை முடிவுகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வராமல் தினத்தந்தி பத்திரிகையில் மட்டும் வரக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போடாத பத்திரிகைகளைத் தான் கேட்க வேண்டும்.

திரு. செ. மாதவன் : எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிடாததற்கு அந்தப் பத்திரிகைகளுக்கு அவகாசம் போதாததுதான் என்று கூறப்படுகிறது. இனிமேல் இந்தமாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்க என்ன உத்தரவாதம் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காலதாமதம் இல்லாமல் பத்திரிகைகளுக்குத் தரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தெரிவிக்கப்பட்டது. தயாரானவுடனே, அதற்கு மேல் தாமதம் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தோடு உடனடியாகப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது. மாலையில் வெளி வரும் பத்திரிகைகள் அவை. அவர்களுக்கு அனுப்பப்பட்ட அன்றைக்குப் போடுவதற்கு முடியாது. ஆகவே, போடப்போவதில்லை என்று சொன்னார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு முடிவுகளைப் பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியிட்டு கட்டணம் செலுத்த வேண்டுமென்று மாநில அரசாங்கத்தைக் கேட்டார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றிய தகவல் இல்லை. விளம்பரமாகத்தான் போட வேண்டுமென்றால் அப்போது அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்று யோசிக்கும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : மார்ச் மாதத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுதுவதற்கு நவம்பர் மாதத்திலேயே சம்பளம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்னும் அக்டோபர் பரீட்சை ரிசல்ட்ஸ் வெளிவரவில்லை, நவம்பரிலேயே மார்ச்

9th November 1965]

பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டுமென்ற நிலை இருப்பதால் அக்டோபரில் தேருதவர்கள் மார்ச்சில் பரீட்சை எழுத முடியாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் புகார் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : பள்ளி இறுதித் தேர்வின் முடிவுகள் இன்ன நாளில் குறிப்பிட்ட நேரத்தில் அறிவிக்கப்படும் என்று முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறதா ? அப்படி அறிவிக்கப்பட்டிருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் வெளியிடப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்னதாகவே தெரிவிக்கப்படும் என்று சொல்லித் தெரிவிக்கப்பட்டதாக நினைக்கவில்லை. இந்த ஆண்டிலே பரீட்சைகள் எல்லாம் கொஞ்சம் காலதாமதமாகவே நடந்தன. பரிசீலனையும் காலதாமதமாயிற்று. ஆகையால் தயாரான உடனே பத்திரிகைகளுக்கு அனுப்பினார்கள்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO WITHERNIG OF PADDY CROPS IN NORTH ARCOT AND CHINGLEPUT DISTRICTS.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பருவ மழை தவறியதால் நெற்பயிர்கள் வாடுவதால், துளைக்கிணறுகள் வெட்டி, குடியானவர்களுக்கு எண்ணெய் பம்புசெட்டுகளைக் குறைந்த விகிதங்களில் வாடகைக்கு விடுவது ஆகியவற்றைக் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைத் தங்கள் மூலம் கனம் உள்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

Chingleput district.—In this district the condition of the standing paddy crop is fair. It is a fact that the manavary paddy has been affected but owing to recent rains they are also showing signs of recovery. In Tiruttani taluk and in Pennalurpet sub-taluk, there have not been adequate rains. with the result that the crops in certain areas are not in good condition. As North East monsoon has already set in, there may not be any cause for anxiety and the position is likely to improve. In certain areas, due to late onset of the monsoon, transplantation has been delayed. The Collector is, however, keeping a close watch over the situation.

North Arcot district.—In this district the seasonal condition is fair in all taluks except in Arkonam and in some villages of Arni taluk in North Arcot district. There was scanty rainfall till